1973 பிப்ரவரி 5]

ஒடப்பேரிக் கால்வாய் நீர்த்தேக்கம்

* 12 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஈகுவார்பாளையம் அருகில் ஒடப்பேரிக் கால்வாயின் மேல் கட்டப்பட வேண்டிய சிறிய நீர்த்தேக்க அணைத் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு என்ன ? தண்ணீர் வீணுகப் போய்க்கொண்டிருக்கிறது. கொஞ்சம் விரைவாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இயலுமா? இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்கு அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டம் இப்பொழுது பரிசிலனையில் இருந்துவருகிறது. இந்தத் திட்டம் இயலக்கூடும் என்று தெரிய வந்தால் இதற்கு மதிப்பீடு ரூ. 2 லட்சம் ஆகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்டம் பரிசீலனைக்குப் பிறகு அரசுக்கு வந்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கிழக்குக் கடற்கரைச் சாலை

* 13 வினு—திரு. அ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கிழக்குக் கடற்கரைச் சாலைக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள வழி, நாகூர், நாகப்பட்டினம் நகரம் வழியாகச் செல்லவில்லையென்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உத்தேச கிழக்கு கடற்கரை சாலை அமைப்பு நாகூர், நாகப்பட்டினம் நகர்புறங்களின் வழியே செல்லுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

திரு. அ. இராசமாணிக்கம் : இந்தச் சாலையின் அகலத்தை நோக்கத்தில் கொண்டு, அந்த ஊரில் இட நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால் நகரத்திற்குப் புறத்தே போக இந்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அரசுக்கு எழுதி அனுப்பினால், பரிசீலிக்கலாம்.

Sunflower cultivation.

* 14 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to encourage the growth of sunflower in this State?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம்.

திரு. ஆ. கு. சுப்பையா : சூரியகாந்தி செடி வளர்ப்பதற்கு தஞ்சை மாவட்டத்தில் ஏதாவது விசேஷமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டில் கோவை, தஞ்சாவூர், திருச்சி, இராமநாதபுரம், மதுரை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் ஆகிய எல்லா மாவட்டங்களிலும் 160 ஹெக்டார் பரப்பு அளவுக்கு 320 விளக்கப் பாத்திகள் ஆங்காங்கு நிறுவுவதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : சென்ற ஆண்டு பருத்தி அதிகமாகப் பயிரிடுங்கள் என்று தஞ்சை மாவட்டத்தில் மிக வேகமாக பிரசாரம் செய்யப்பட்டது. நாங்கள் எல்லாம் மிக அதிக லாபம் வரும் என்று எதிர்பார்த்தோம். அதனால் பருத்தி போட்டோம். ஆனால் பஞ்சை வாங்குவதற்கு ஆள் கிடையாது. அதைப் போல் இப்பொழுது சூரிய காந்தி பயிரிடுங்கள் என்று பிரசாரம் செய்யப்படுகிறது. அம்மாதிரி அதிகமாக உற்பத்தி செய்யும் பொருள் விற்பனை ஆவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 10,000 ஏக்கரில் பி. ஆர். எஸ். 72 பருத்தி சாகுபடி செய்யப்பட்டது அது விற்கப்படவில்லை என்று